# வட்டுக்கோட்டை
# வெப்பட்டியொல்லை
# அருண்மிகு செந்தில் முருகையா சுவாமி
# நான்மணிமாலை





ஆக்கியோன்
பண்டிதமணி ,பண்டிதர்,கலாபூஷணம்,
சைவப்புலவர்மணி
,செஞ்சொற்காவலன்,
கதிரேசர் மயில்வாகனனார்



©

## பதிப்பு விபரம்


முதற் பதிப்பு : 2025.07.19

நூல் தலைப்பு : நான்மணிமாலை

ஆக்கம் : பண்டிதமணி , பண்டிதர் , கலாபூஷணம், சைவப்புலவர்மணி, செஞ்சொற்காவலன் திரு. கதிரேசர் மயில்வாகனனார்

உரிமை : செந்தில் முருகையா திருக்கோயில், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை

வெளியீடு : செந்தில் முருகையா திருக்கோயில் , வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை

அச்சுப் பதிப்பு : **ES** அச்சகம் ,யாழ்ப்பாணம்

படிகள் : **100**

# ஆசியுரை

சிவபெருமானும் முருகப் பெருமானுக்கும் பேதமில்லை என்று அருள் நூல்கள் கூறுகின்றன.

**" ஈச னேயவ னாடலால் மதலையா யினன்காண்**
**ஆசி லாலவ னறுமுகத் துண்மையா லறிநீ**
**பேசி லாங்கவன் பரனொடு பேதக னல்லன்**
**தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்"**

என்று கூறுகின்றது கந்தபுராணம்.

**"அதலி னமது சக்தி யறுமுக னவலு யாமும்**
**பேதக மன்றால்..............................."**

என்பதும் இதனையே வலியுறுத்தும் முற்காலந் தொடக்கம் இலங்கைத் திருநாட்டில் முருக வழிபாடு இருந்து வருகின்றது. பரிபாடல், திருமுருகாற்றுப்படை முதலான நூல்களில் முருகனைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் "அறுமுகச் செல்வன் அணிதிகழ் சேயிலும்.." என்றும் "கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" என்றும் முருகன் கோயில்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. பன்னிரு திருமுறைகளிலும் முருகனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

முருகப் பெருமான் கலியுகத்தில் பிரத்தியட்ச தெய்வமாக இருந்து அடியார்களுக்கு அருள் புரிந்து வருவதினால் அவனுக்குக் "கலியுகவரதன்" என்னும் சிறப்பு பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. முருகன் தனது கையில் வேல் வைத்திருக்கின்றான்.

**"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறையீட்ட**
**தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி**
**குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்**
**துளைத்தவேல் உண்டே துணை"**

என்னும் செய்யுள் அந்த வேலின் மகிமையை நன்கு எடுத்துக் கூறுகின்றது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பர் எனும் பெரியவர் செந்தில் முருகனின் ஆணைப்படி திருச்செந்தூர் சென்று முருகனால் வழங்கப்பட்ட வேலாயுதத்தை (வேல் வடிவிலுள்ள முருகனைக்) கொண்டு வந்து , வெப்படிக் ஒல்லையிலுள்ள கோயிலில் பிரதிஸ்டை செய்து அந்தக் கோவிலுக்கு செந்தில் முருகையா தேவஸ்தானம் என்று பெயர் சூட்டி வழிபாட்டார். அப்படிப்பட்ட அருண்மிகு கோவிலில் நித்திய பூஜைகளை செய்து வருவது எனக்கு மகிழ்சியளிக்கின்றது.

அதியசமும் கருணையும் மிக்க முருகையன் மீது அமரர் பண்டிதர் க.மயில்வாகனனார் எழுதிய "நான்மணிமாலை" கவிஞரின் பத்தியின் ஆழத்தை வெளிப்படுத்துவதுடன் நூலாசிரியர் சிறந்த ஒரு கவிஞர் என்பதை இந்த நூல் எடுத்துக்காட்டும். இந்த நூல் வெண்பா, ஆசிரியப்பா, கட்டளைககலித்துறை, ஆசிரியவிருத்தம் என்ற பா அமைப்புக்களுடன் அமைந்துள்ளமை சிறப்பிற்கு உரியதாகும். நூலாசிரியரும் , அருமருந்தனைய இந்நூலை அச்சிட்டு வழங்கிய செந்தில் முருகையா தேவஸ்தானத்தினரும் சைவ உலகின் பாரட்டுக்கு உரியவர்கள் ஆவர். அவர்களுக்கு என் ஆசியைத் தெரிவித்து நூல் என்றும் நிலைத்து நிலவ வேண்டுமென முருகனைப் பிரார்த்தித்து அமைகின்றேன். வட்டுக்கோட்டை மக்கள் வெப்பட்டி ஒல்லை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருந்து அருள்புரியும் முருகப் பெருமானை வழிபட்டு எல்லா நலன்களையும் பெற்று இன்புறுவார்களாக

**ஆலய நித்தியகுரு,**

**சிவஸ்ரீ. கணேச சுஜிந்தன் குருக்கள்(BCA)**

**2025.06.18**

# வாழ்த்துரை

ஈழநாட்டின் வடபாலுள்ள பாரம்பரியக் கிராமங்களிலே வட்டுக்கோட்டைக்குப் பல்வேறு சிறப்பம்சங்கள் உண்டு. பண்டைக் காலத்திலிருந்தே வட்டுக்கோட்டை கல்வி , கலை , கலாசாரம் , புலமைத்துவம் ஆகியவற்றிலே சிறப்புற்று விளங்கியது. இதனாலேதான் மேலைப்புலத்திலிருந்து வந்த மிஷனரிமார்கள் வட்டுக்கோட்டையிலே உலகத்தரமிக்க உயர்கல்விப்பீடத்தினை நிறுவினார்கள் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கிய வட்டுக்கோட்டையிலே புகழ்பெற்ற பூர்விகமான சைவாலயங்கள் பலவுள்ளன. பத்தி சிரத்தையுடன் அடியார்கள் இசைக்கும் தேவார திருவாசக ஓசைவட்டுக்கள் காற்றிலே மிதந்து கொண்டிருக்கும். தமிழ்ப்புலமைமிக்க கணக்காயர்கள் பலர் இம்மண்ணிலே வாழ்ந்துள்ளனர். வாழுகின்றனர். புராணபடனம் , பஜனை , நாட்டுக்கூத்துக்கள் முதலானவை வட்டுக்கோட்டையிலே காலாதிகாலமாக நிலவிவருவதை யாவரும் அறிவார்கள்.

இத்தகைய பெருமைவாய்ந்த வட்டுக்கோட்டையிலே பிறந்து வளர்ந்தவர்தான் பண்டிதர் க.மயில்வாகனனார். தமிழ்ப்புலமையிலே சிறந்து விளங்கிய இவர் பதிகம், ஊஞ்சல் , புராணம் , தனிப்பாடல்கள் எனப்பலதுறைகளிலும் ஆழமாகக்கால்பதித்தவர். இவர் எழுதிய விசுவேசர் புராணத்திற்கு ஈழத்துத்தலபுராணங்கள் வரிசையிலே குறிப்பிட்டத்தக்க முக்கியத்துவம் உண்டு. இவரின் ஆக்கங்கள் யாவும் நூலுருப்பெற்றதாக தெரியவில்லை. இப்பொழுது, இவர் எழுதிய வட்டுக்கோட்டை அருண்மிகு செந்தில் முருகையா சுவாமி நான்மணிமாலை நூலுருப்பெற்று வெளிவருவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நான்மணிமாலை எனும் யாப்பறிபுலவர்களாலே பாடப்படுவது. வெண்பா, கட்டளைக்கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா ஆகிய நான்கு யாப்புவடிவங்களையும்

மாலையாகத் தொடுத்து இறைவனுக்கு சூட்டுவது என்று ஆன்றோர் கூறுவர். இருபதாம் நூற்றாண்டின் ஈடிணையற்ற தமிழ்க்கவிஞராக விளங்கிய மகாகவி பாரதியார் விநாயகர் நான்மணிமாலை பாடினார். நான்மணிமாலை எனும் இலக்கிய வடிவத்தின் சிறப்பினை உணர்ந்தே பாரதி பாடினான் என்பதும் குறிப்பிடத்தக்கது. பண்டிதர் க.மயில்வாகனனாரின் இந்த மணிமாலை அவரது யாப்பறிபுலமையை வெளிப்படுத்துவதோடு அவரது பக்தி உணர்வையும் பளிச்செனக் காட்டுகின்றது. இவரது கவித்துச் சிறப்பைச் சுட்டிக்காட்டப் பல பாடல்களைச் சுட்டிக்காட்டலாம். ஏன் முழுப்பாடல்களும் நயம் பொருந்தியவைதான்.பக்தர்கள் தாம் கலந்து பாடும் பாடல்களிலே ஒன்றையும் தள்ளிவிட முடியாது. வகை மாதிரிக்கு ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்டலாம். விருத்தயாப்பில் அமையும் பாடல்களில் சில.

**“நஞ்சமுதம் கொண்டபரன் சுதனாய் வந்தீர்**
**நக்கீரன் றனக்குமருள் நாடிச் செய்தீர்**
**கொஞ்சுமிசைத் தண்டையது கலகலக்கக்**
**குகபரனே ஓடோடி வாருமையா**
**விஞ்சுபுகழ் வெப்பட்டியொல்லை வாழ்வே**
**விரிசுடரே அருண்மலையே விமல மூர்த்தி”**

**“குறையேதும் இலையென்றுன் அடியரெல்லாம்**
**குதூகலிப்பர் குமரேசா உமையாள்பாலா**
**மறையினருள் வடிவெனவே வேதமெல்லாம்**
**மாமயிலோய் முருகோனே புகழ்ந்து பாடும்**
**இறைசிறிதும் தாழ்க்கலையாய் எம்முன்வந்தே**
**ஈசாவெம் வேலழகா ஆசிநல்கும்**
**நறைமலியும் சோலையில் வட்டூர்வாழ்வே**
**நங்கைவள்ளி குஞ்சரியார் நயக்கும்தேவே”**

ஆற்றொழுக்காய் சொற்களை அடுக்கிச் செல்லும் ஆற்றல் பெற்ற மயில்வாகனனார் அற்புதமான ஓசை நயத்துடன் நான்மணிமாலையை நகர்த்திச் செல்கின்றார்.வெண்பாவுக்கு வகைமாதிரியாக ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்டலாம்.

**“தொழுதார் அருணகிரி தூவடிகள் போற்றி
விழுமம் துடைத்தனைநீ வேலோய் - வழுவேன்
குருவாகி வந்து குறைதீரும் வட்டூர்ப்
பெருமானே சேயோய் பெயர்ந்து”**

**“மாமயில் வீரனை மன்றாடி மைந்தனைக்
காமரு வட்டூர்க் கடம்பனை - ஏமுறுசீர்
பூங்கொடியார் வள்ளிமயில் போற்றுஞ் சிவசுதனை
ஈங்கேத்த இல்லை இடர்”**

வெண்பாவைத் தொடர்ந்து கட்டளைக்கலித்துறை அமைவது நான்மணிமாலை மரபு. கட்டளைக்கலித்துறைக்கு உதாரணமாக:-

**“இனியனை ஏழையர் உள்ளத் தவிசில் இருப்பவனைக்
கனியனை முன்னாள் உமையவள் தந்தருள் காவலனைத்
தணியனை வெப்பட்டி ஒல்லையில் தங்குந் தயாநிதியைக்
குனிசிலை ஏந்தி குமர உனைப்பாடக் குறையிலையே”**

**“என்னே இனியுய்யும் ஏந்திழை என்னா இரங்குவல் யான்
முன்னே குறமென் கொடிக்கருள் செய்திட்ட மூர்த்தியவன்
தன்னார் அகலத்துச் சூடிய தொங்கல் தராதகன்றான்
இன்னார் நிலவுங் கடலொலி யோடிங் கெழுந்திடுமே”**

தமிழ் வழங்கும் யாப்பு வடிவங்களிலேயே கட்டளைக்கலித்துறை கடினமானதொன்று என யாப்பறிபுலவர்கள் குறிப்பிடுவர்கள் ஆனால் பண்டிதர் மயில்வாகனனாருக்கு வெண்பாவும் கட்டளைக்கலித்துறையும் மிகலாவகமாக அமைந்திருப்பதை இந்த நூலினூடு காணமுடிகின்றது.

அகவல் யாப்பு அமைதியான ஆறு போல இந்த நான்மணிமாலையிலேயே கற்போர் உள்ளத்தை மகிழ்வித்து கந்தக்கடம்பனை நெஞ்சில் நிறுத்த உதவும் என்று திடமாக நம்பலாம். பக்தி சிரத்தையுடன் பண்பாட்டுப்பின்னணியிலே யாப்பு நெறி பிறழாது இந்த நான்மணிமாலையை யாத்த பண்டிதப்புலவர் பெருமையைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**பேராசியர்.எஸ்.சிவலிங்கராசு**
**28.06.2025**

# வாழ்த்துரை

வட்டுக்கோட்டை என்றால் பண்டிதர் க.மயில்வாகனனாரை நினையாதிருப்பவர் எவருமில்லை. ஈழத்துச் சான்றோர்கள் பற்றி எழுதியவர்கள் அவருடைய தமிழ்ப் பணிகளையும் குறிப்பிட்டுள்ளனர். அவர் தமது எண்பதாவது பிறந்தநாள் காணிக்கையாக வட்டுக்கோட்டை மேற்கு வெப்பட்டியொல்லை திரு அருண்மிகு செந்தில் முருகையா சுவாமியைப் போற்றி நான்மணிமாலை பாடியுள்ளார்.

தமிழிலுள்ள பிரபந்தங்களுள் (சிற்றிலக்கியங்களுள்) நான்மணிமாலையும் ஒன்றாகும். ஒன்பது மணிகளுள் நான்கு மணிகளை (வைரம் , முத்து, பவளம் , மரகதம் என்பன) கோர்த்து ஒரு மாலை அமைப்பது போல தமிழ் பா வடிவங்களுள்ளே நான்கு வடிவங்களைப் பயன்படுத்தி அமைக்கப்படும் ஓர் இலக்கிய வடிவமாகும்.

அருண்மிகு செந்தில் முருகையா சுவாமியைப் போற்றும் நாண்மணிமாலையில் ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை , ஆசிரியவிருத்தம் ஆகிய நான்கு பாவடிவங்களைப் பயன்படுத்திப் பாடியுள்ளார்.

**சீரார் வளவயல் வட்டூர் முருகையன்**
**ஏரார் திருவடிக்கே இன்றமிழால் - பேராரும்**
**நான்மணி மாலை நவின்றேத்த ஐங்கரன்றன்**
**காண்மலர் உண்டே தலை.**

என்னும் காப்புச் செய்யுளுடன் நூலை தொடங்குகிறார். வெண்பாவுக்கு நல்ல எடுத்துக்காட்டாக இச் செய்யுள் அமைகிறது. இப் பாடல்களிலுள்ள சந்தச்சுவையும் பக்திச்சுவையும் பாடல்களைப் படித்து மகிழ்வதால் ஏற்படுகின்றன.

**இயங்கொட்டி ஆடுங் குரவையின் இச்சையால் ஏந்திழையாழ்**
**புயம்பற்றி ஆடுவை என்பர் புலவர் பொறிமயிலோய்**
**நயம்மிக்கு அன்னையர் ஆங்கது கேட்டவர் நாணுவர்காண்**
**வயம்மிக்க வட்டூரில் வெப்பட்டி ஒல்லையில் வாழ்குகனே**

எனக் கட்டளைக் கலித்துறைச் செய்யுளிலே சந்தங்கள் அமைக்கிறார் புலவர். இவ்வாறு அழகுணர்வும் பொருட்சிறப்புமுடையதான பல கவிதைகளை புலவர் இந்நூலில் தந்துள்ளார்.

இறையுணர்வும் செந்தமிழ்ச் சுவையுணர்வுமுடைய பாக்களாலே இறைவனைப் போற்றி அப்பாக்களூடாக தன் குருவினை நினைந்து அவற்றை இறைவனுக்கு காணிக்கையாகச் சமர்பிக்கும் அற்புதச் செயற்பாட்டின் விழுமிய வெளிப்படாகும். இந்நான்மணிமாலையினைப் பாடியளித்துள்ள வட்டுக்கோட்டை பண்டிதர் க.மயில்வாகனனார் அவர்களைப் பாராட்டி இந்த வாழ்த்துரையினை நிறைவுசெய்கிறேன்.

**இலக்கிய முதுமுனைவர் ஆ.சண்முகதாஸ்,**
**வாழ்நாள் தமிழ் பேராசிரியர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**
**10.03.2025**

# வாழ்த்துரை

வட்டூர் பண்டிதர் க.மயில்வாகனம் அவர்கள் வட்டுக்கோட்டையிலேயே பிறந்து கல்வி கேள்விகளிலே சிறந்து தமிழில் சிறப்புமிகு பாண்டித்தியம் பெற்று சிறந்த கவிஞராக, ஆசிரியராக அதிபராகக் கடமைபுரிந்து வாழ்ந்துவந்தார். தனது எண்பதாவது பிறந்தநாள் காணிக்கையாக “வட்டூர் வெப்பட்டியொல்லை திருச்செந்தூர் முருகன் நான்மணிமாலை” என்னும் நூலைப்பாடியுள்ளார். இப்பாடல்கள் இவரின் கவித்துவம்மிக்க அனுபவங்களையும் இலௌகீக பொருள் கடந்து இறைஞானம் மிகுந்த தன்மையையும் பரந்த ஞானமும் தொலைநோக்கும் கொண்ட தன்மையுமாக அமைகின்றது. இவர் தான் எழுதிய இப்பாடலை ஆலய அறங்காவலர் திரு.சண்முகானந்தசிவம் அவர்களிடம் கொடுத்துள்ளார். அவர் அவற்றைப் பவித்திரமாகப்பேணி நூலாக்கம் செய்யவேண்டுமென விரும்பியதற்கமைய இவ்வாண்டு நடைபெறும் மகோற்சவத்தின் தேர்த் திருவிழா அன்று வெளியிட்டு மகிழ்வடைகின்றார்.

பண்டிதர் அவர்களின் நான்மணிமாலை என்னும் நூல் பெயரிற்கு ஏற்றாற்போல முத்து, மாணிக்கம், பவளம், இரத்தினம் என்ற நான்கு மணிகள் கொண்டு கோர்த்த மாலைபோல வெண்பா, ஆசிரியப்பா, கட்டளைக்கலித்துறை, ஆசிரியவிருத்தம் என்ற பா அமைப்புக்களுடன் அமைந்துள்ளமை சிறப்பிற்கு உரியதாகும். இந்நூலில் அமைந்துள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் செய்யுள் அழகும் பொருள் செறிவும் இறைபக்தியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

ஆசிரியர் தன் ஆன்மஞான உணர்வு மேலோங்க திருச்செந்தூர் முருகன் மீது அவர்கொண்ட பக்தியின் தன்மையையும் தமிழ் அழகையும் தமிழ்மீது கொண்டுள்ள பற்றையும் தன் ஊர் மீது கொண்டுள்ள பற்றையும் வெளிப்படுத்துவனவாக பாடல்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"பொன்னின் குடத்திற்கு பொட்டிட்டால் போல.." இந்நூல் இவர் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எழுதிய நூல்களிலும் மிகச்சிறப்புடையதாக பலரும் படித்து இறையின்பம்பெறும் வகையில் அமையப்பெற்றுள்ளது. இந்நூல் எம்பெருமானின் அருளால் வெளியிடப்படுவதையிட்டு மனம் மொழி மெய்களால் வாழ்த்தி அமைகின்றேன்.

**சைவப்புலவர் சண்முகவடிவு தில்லைமணி,**
**ஓய்வுபெற்ற ஆசிரியை,**
**யா/வட்டு இந்துக் கல்லூரி**
**2025.06.19**

# அணிந்துரை

குகநேயச் செல்வர்காள்!

பண்டிதமணி, சைவப்புலவர்மணி, கலாபூசணம், கதிரேசர் மயில்வாகனனார் அவர்கள் வட்டுமாநகரம் பெற்றெடுத்ததோர் அரிய பொக்கிசமாகும். இவரால் நமது வட்டுமாநகரம் மிகவும் பெருமையடைகிறது. இவர் தமிழ் ஆர்வலர்களுக்காகவும் மாணவச் செல்வங்கட்காகவும் யாத்த பல நூல்கள் மூலம் பயன் மிக அதிகம். வட்டூர் ஈழத்துத் திருச்செந்தூர் ஆலயத்தில் நடைபெறும் புராணங்கட்குப் பயன் சொல்வதில் மிகவும் சிறப்பு வாய்ந்தவர். அத்துடன் பலரை இத்துறையில் உருவாக்குவதில் முதன்மை வாய்ந்தவராக இருந்தார். இலங்கைத் தேசிய கீதத்தைத் தமிழில் மொழி பெயர்த்த முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி அவர்கள் இவரின் உறவினர் என்பதோடு அவரது அயல்வீடே இவரது “வேல்வாசம்” இல்லம் அமைந்துள்ள இடமாகும்.

இவரது மனைவி திருமதி. பத்மாவதி அவர்கள் செந்தூர் முருகையனின் பெரும் பக்தையாகும். தினமும் மலர் பறித்து முருகையனின் பூசைக்குக் கொடுத்ததின் பின்பே தனது நாளாந்தப் பணிகளைப் புரியும் ஒருவராவார். திருமதி பத்மாவதி அவர்களின் தந்தையார் அதாவது திரு க.மயில்வாகனனாரின் மாமனார் திரு.முருகர் வடிவேலர் அவர்கள் அந் நாளைய பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராவார். பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் அம்மையாரின் இலங்கை விஜயத்தின் போது மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றி அவரிடமே பாராட்டுப் பத்திரம் பெற்றுக்கொண்ட ஒருவராவார்.

பண்டிதமணி மயில்வாகனனார் முதுமையில் தனது ஞாபகசக்தி குறைந்த காலத்திலும் எந்நேரமும் தனது அறையில் படித்துக்கொண்டிருப்பார் அல்லது எழுதிக்கொண்டிருப்பார். அவரது வயது முதிர்ந்த காலத்தில் நான் ஒரு நாள் சந்தித்த போது ஞாபகசக்தி குறைந்த காலத்திலும் எப்படி அவரால் திறமையாக எழுத முடிகிறது என அவரை வினவிய போது அவர் சொன்ன பதில் இது தான் "மகனே! எமது மூளையில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அரைவாசிப் பகுதியில் தேக்கி வைக்கப்பட்ட தேவையற்ற பதிவுகள் தானாக மெல்ல மெல்ல அழிந்து போய்விடும். அடுத்த அரைவாசியில் தேக்கி வைக்கப்பட்ட கல்வி மட்டும் அழிந்துவிடாது பாதுகாக்கப்பட்டு நமக்குக் கைகொடுக்கும். அது என்றும் நிலைத்து நிற்கும்" என்றார். அவர் கூறிய அனுபவ உண்மை பலருக்கும் இது சமர்ப்பணம்.

அவரால் ஆக்கப்பெற்ற வட்டுக்கோட்டையூர் ஈழத்துத் திருச்செந்தூர் வெப்பட்டியொல்லை அருண்மிகு செந்தில் முருகையனின் "நான்மணிமாலை" இலிருந்து ஓர் எடுத்துக்காட்டு:-

**"இளையோய்! ஆழகா! குமரா! குகனே!**
**வளைக்கை மலைமகள் மகிழும் மதலாய்!**
**ஆலந் தன்னை அமுதுசெய் துண்டோன்**
**மாலும் அயனும் காண்கிலா மகிபன்!**
**விடைமிசை ஏறும் விமலன் மகனே !"**

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா? இளையவன் ,அழகன்,குமரன்,குகன் எனும் பெயர்கள் முதலடியில் சுட்டப்படுகின்றன. "மலைமகள்

மாதுமை மகிழ்வெய்தும் மதலைக் குழந்தையே !..” எனக் கூறுகின்றது இரண்டாவது அடி.
ஆலகால விடத்தை அமுதமென உண்ட சிவன் பற்றி மூன்றாவது அடியிற் காட்டப்பெறுகின்றது. பெருமான் நஞ்சை உண்பதை நோக்கிய உமையம்மை அவரது கண்டத்தை அழுத்திப் பிடித்த காரணத்தால் கழுத்து நீலநிறமாக மாறியதை உணர்த்தும் “திருநீலகண்டன்” எனும் பெயரின் சரித்திரம் மூன்றாவது அடியிற் புலப்படுகிறது.

பிரமா , விட்டுணு ஆகியோர் இறைவனின் (சிவசோதியின்) அடியையும் முடியையும் தேடிய வரலாற்றை நான்காவது அடி புலப்படுத்துகிறது. விடையேறும் சிவபெருமானின் முக்கண்ணிற் தோன்றிய சண்முகச் சரவணனின் வரலாறு இறுதி அடியிற் தொக்கி நிற்கிறதல்லவா? நான்மாணிமாலையுட் புகுந்து முத்தெடுத்து வாருங்கள்! ஈழத்துத் திருச்செந்தூர் முருகையனின் அருளும் ஆசியும் கிடைப்பதாக! பண்டிதமணி மயில்வாகனனாரின் பெருமையும் புகழும் என்றும் நிலைத்து நிற்பதாக ! வாழ்க அவரது புகழ் ! யாவர்க்கும் சிறியேனுடைய வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!”

வணக்கம்

**ஓய்வுநிலைப் புகையிரத நிலைய அதிபர்,**
**கலாபூசணம்,கலைவாரிதி,**
**சீவரத்தினம் பாலசுப்பிரமணியசிவம்**
**2025.06.14**

# எனதுரை

அமிழ்தினும் இனியது நம் அன்னை தமிழ்மொழி முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமையாய் என்றும் பொலிவாய் பொலிந்து நிற்பது செந்தமிழ். தொன்மைச் சிறப்புடன் தகைசால் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் தன்னகத்தே கொண்ட செம்மொழி. பைந்தமிழ் மொழி அளவிலும் அவையிலும் தமிழிலுள்ள தடுப்பாடல்கள் போல் பிற்காலங்களில் இல்லை என்பது அறிஞர் கூற்று. எம் அன்னை தமிழை அருந்தமிழை எவ்வாறு விளக்குவது " ஞால மறந்த மென்மைத் தெய்வத் தமிழ் " , தெய்வத் தமிழ் என வாயால் வாழ்த்திய பெருமகனார், சேக்கிழார் பெருமானை தமிழைத் தெய்வத்தோடு தொடர்புபடுத்திக் கூறும் தனிச்சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு.

இத்தகைய செம்மொழியின் சிறப்பினை-தொன்மையினை படம் பிடித்துக் காட்டும் காலக் களஞ்சியமாய் இன்றைக்கு துலங்குவன பாட்டும் தொகையும் கீழ்க்கணக்குமாகும். இந்த வகையில் எம்மவர்க்கும் பெருமை சேர்த்த பெரும் புலவர்களில் அமரர் க.மயில்வாகனனார்( பண்டிதர்) பெரும் இடத்தை வகிப்பவர். தமிழில் பிரபந்தங்களுள் நான்மணிமலையும் ஒன்றாகும்.

ஒன்பதுமணிகளுள் நான்குமணிகளாகிய (வைரம் , முத்து , பவளம் , மரகதம் ) என்பவற்றை சேர்த்து ஒரு மாலை அமைப்பதைப் போன்று தமிழ் பா வடிவங்களுள்ளே நான்கு வடிவங்களையும் பயன்படுத்தி அமைக்கப்படும் ஓர் இலக்கிய வளமே "நான்மணிமாலை"ஆகும். அமரர் க.மயில்வாகனனார் (பண்டிதர்) செந்தில் முருகையா மீது வைத்திருந்த பக்தியினால் நான்மணிமாலை என்னும் திவ்விய பாடலை 80 வயதில் பாடி எனது கையில் தவழ விட்டார். அருண்மிகு செந்தில் முருகையா சுவாமியை போற்றும் நான்மணி மாலையை விருத்தம் , ஆசிரியப்பா , வெண்பா , கட்டளைக்கலித்துறை ஆகிய வடிவங்களில் இப்படியான செழுமை நிறைந்த நான்மணிமாலையை வடித்த பெருமை

அன்னாரையே சாரும். அத்துடன் கந்தபுராணக்காலங்களில் தலைமை பௌராணகி திலகமாக இருந்து கந்தபுராணப் பாடல்களுக்கு பயன்விரித்து மக்களை இறை இன்பத்தில் திகழ வைத்த பெருமை இவரைச் சாரும். எமது ஆலயத்தில் நடக்கும் பெரும் திருவிழாவின் 4ம் பூசையை ஏற்று சிறப்புற ஆற்றியும் வந்துள்ளார். அன்னாரின் மரணத்துக்கு பின்னர் அவர்களின் அறிவுசார் புத்திரர்கள் இத் தெய்வீக நற்பணியை சிறப்புற ஆற்றி வருகின்றார்கள். காலத்துக்கு காலம் எமது ஆலயத்தினால் வெளியீடு செய்யப்பட்ட செந்தில் முருகையா பக்திமாலை,முருகையாகாதை ,முருகையா செம்மொழிமாலை , கந்தபுராண தெய்வயானை திருமணப்படலம் ஆகியவற்றின் வரிசையில் இவ் வெளியீட்டுப்பணி காலம் தாழ்த்தி இருந்தபோதிலும் என்னுடைய காலத்திலேயே வெளியீடு செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த நூலுக்கு குறுகிய காலப்பகுதியில் தங்கள் சிரமத்தைப்பாராது சிறந்த முறையில் அன்பு மீதுர அணிந்துரை அளித்த கலாபூசணம் திரு.சீ.பாலசுப்பிரமணியசிவம் (ஓய்வு நிலைப்புகையிரத நிலைய அதிபர்) ஐயா அவர்களுக்கு என்னுடைய நன்றிகள். ஆசியுரையை பல வேலைப்பழுவின் மத்தியில் வழங்கிய ஆலய நித்திய குரு சிவஸ்ரீ. கணேச சுஜிந்தன் குருக்கள்(BCA) ஐயா அவர்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த நன்றிகள் . வாழ்த்துரையை சிறந்த கவிநயத்துடன் வழங்கிய வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசு ஐயா , வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஐயா மற்றும் சைவப்புலவர் சண்முகவடிவு தில்லைமணி அம்மா ஆகியோருக்கு என்னுடைய இதயக்கமலத்திலிருந்து நன்றிகளை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அதுமட்டுமல்லாது பல சிரமத்தின் மத்தியிலும் செந்தில் முருகை அருட்பாமாலையை ஆக்கிதந்த சைவப்புலவர் , பண்டிதர், வைத்தியர் திரு மா.கணநாதன் ஐயா அவர்களுக்கு உள்ளம்கனிந்த நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்சியடைகின்றேன். இவ் வெளியீட்டுக்காக பண உதவியை அமரர் நாகமணி அருளானந்தம் (தோற்றம்:-

30.03.1937 மறைவு:-08.06.2007) மற்றும் அமரர் அருளானந்தம் திலகவதியம்மா (தோற்றம்:-19.02.1937 மறைவு:-09.08.2018) சார்பாக வழங்கிய மகேஸ்வரன் கானுஜனுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகள். இதனை தவிர அச்சு பிரதியை நூலுடன் ஒப்புநோக்கி மெச்சத்தக்க முறையில் வழுக்களை திருத்தி உதவிய கலாபூசணம் சீ.பாலசுப்பிரமணியசிவம் ஐயா (ஒய்வு நிலை புகையிரத நிலைய அதிபர்) அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்சியடைகின்றேன். அதுமட்டுமல்லாது மதிப்பீட்டுரையை திறன்பட வழங்கிய திருமுருக துரந்தரி. திருமதி குஞ்சரா விஸ்ணுராசா அம்மாவுக்கும் நன்றிகள்.

இப் புத்தகத்தின் அட்டைப்படங்களை வடிவமைத்து தந்த திரு.விஸ்ணுராசா வள்ளிகாந்தன் (வவுனியா கருமாரி அம்பாள் ஆலயத் தாபகர், வட்டுக்கோட்டை கால்நடை வளர்போர் கூட்டுற சங்க உபதலைவர்) மற்றும் அருளானந்தம் கோணேஸ்வரன் (பிரபல ஒப்பந்தக்காரரும் பொறியியலாளர்) ஆகியோருக்கும் நூல் வெளீயீட்டு குழாம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இவ் வெளியீட்டு புத்தகத்தை சிறந்தமுறையில் அச்சுவாகனம் ஏற்ற உதவிய மயில்வாகனம் மகேஸ்வரன் (அவுஸ்ரேலியா) மற்றும் மகேஸ்வரன் செல்வரஞ்சினி ஆகியோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகள். செந்தில் முருகையா தேவஸ்தானத்தின் மூலமாக இந்த நூலை முருகையனின் பரிபூரண ஆசிர்வாதத்துடன் வெளியீட்டு வைப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியாகும். எல்லாம் வல்ல முருகையனின் அருளை அனைவரும் பெற வெளியீட்டு குழாம் சார்பில் இறைவனைப் பிராத்தித்துக்கொள்கின்றேன்.

**தேசமானிய கலாநிதி ,தேசபந்து,**
**ஓய்வு பெற்ற பொறியியலாளர்,**
**பொன்னுச்சாமி சண்முகானந்தசிவம்,**
**அகில இலங்கை சமாதான நீதிவான்,**
**அறங்காவலர் செந்தில் முருகையா திருக்கோயில்**
2025.07.05

# வட்டுக்கோட்டை வெப்பட்டி ஒல்லை செந்தில் முருகையா கோயில் ஆலய வரலாறு

## 1. ஆலய அமைவிடம்

செந்தில்முருகையா கோயில் ஆனது இந்துமா சமுத்திரத்தில் நித்திலமாம் சிவபூமியாய் திகழும் ஈழமணித்திருநாட்டில் வடக்கு மாகாணத்தில் யாழ்பாண நகரில் இருந்து மேற்குத் திசையாக 13 கிலோமீற்றர் தூரத்தில் காரைநகர்வீதியில் வடக்கு புறமாக வட்டுக்கோட்டை கண்ணகாம்பாள் சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பன முறையாக அமைந்திருப்பதோடு ஆலயச்சூழல் எங்கணும் ஆகமத்தில் குறிப்பிடப்பட்ட பத்திர,புஸ்ப மரம், செடி, கொடி நிறைந்துள்ளமை சிறப்பிற்குரியதாகும். அவைகளில் வெள்ளெருக்கு, தேவதாது, புன்னை, புங்கை, கருங்காலி, சந்தனம், செண்பகம், அத்தி, பவளமல்லிகை, பொன்னொச்சி, நித்தியகல்யாணி, பலாஸ், வன்னி, கடம்பம், வில்வம், வேம்பு, மா, நாகலிங்கம், நொச்சி, பன்னீர் பத்திரமரம் ஆகிய தெய்வீக மரங்கள் சூழ்ந்த எழில்மிகு தெய்வீக சூழலாக ஆலயம் அமைந்துள்ளது.

## 2. ஆலய வரலாறு

இவ்வாலய வரலாறு பற்றிய பூர்வீகக் கதையாக முன்னோர் வாய்மொழியாக பேசப்பட்டு வந்த கருத்தானது வட்டுக்கோட்டையில் இரண்டு ஆலயங்கள் மிக பழமையானதாக உள்ளன. அவற்றில் ஒன்று கண்ணகாம்பாள் சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றையது வெப்பட்டியொல்லை செந்தில் முருகையா ஆலயம் ஆகும். இவை பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டு காலங்களில் அமைந்தவை ஆகும். வெப்பட்டியொல்லை செந்தில் முருகையா ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் 1735ம்

ஆண்டளவில் கட்டப்பட்டது இந்திய நாட்டின் பிரசித்தி பெற்ற ஆறுபடை வீடுகளில் உறையும் முருக ஸ்தலங்களில் ஒன்றான திருச்செந்தூர் ஆலயத்திலிருந்து தம்பர் என்னும் சித்தரால் வெள்ளிவேல் பெற்று வந்து அவ் வேலினை இவ்விடத்தில் ஸ்தாபித்து பூசை வழிபாடுகளை இயற்றினார். அதுமட்டுமல்லாது நாவாலி அட்டகிரி கந்தசாமிக்கோவில் மூல யந்திரம் செந்தில் முருகையா ஆலயத்திலிருந்து ஆதி காலத்தில் பெறப்பட்டதாக பெரியோர்களால் போற்றி ஏற்றி கூறுவதை அனைவரும் அறிவார்கள்.

"பலகோடிப் பிறவிகளிலே செய்த புண்ணியங்கள் திரண்டு ஒன்றுபட்டாலும் முருக பக்தி உண்டாகும்" என்ற கூற்றிற்கு அமைய ஆறுபடை வீட்டில் ஒன்றான செந்திற்பதிவாழ் சேந்தனின் திருவடிகளை வணங்குவதையே வழக்கமாகக் கொண்ட தம்பர் என்னும் தவத்தோன் மடாலயம் ஒன்றை நிறுவி நாள்தோறும் எம்பெருமானை துதித்து வர செந்தில் முருகப் பெருமான் சித்தர் தம்பரின் செயல்கண்டு வட்டூர் வந்திட திருவுளங் கொண்டு 'ஒரு வெள்ளிக்கிழமை நடுநிசியில் தம்பரின் கனவில் முருகப்பெருமான் மயில் மீது புன்னகை பூத்து வேலுடன் தண்ணொளி திருவடிகாட்டி திருச்செந்தூரிற்கு வருக' என கனவில் கூற துயில் நீங்கி எழுந்த தம்பர் தாம் கனவில் கண்டவற்றை எல்லாம் உற்றார், உறவினர், பெரியோர், நண்பர் என்னும் பலருக்கும் அகமகிழ்ந்து எடுத்துக் கூறினார். ஓர் ஐப்பசி மாத வளர்பிறை பிரதமை தினத்தில் திருச்செந்தூர் ஆலயத்திற்குச் சென்று நோன்பிருக்கத் தொடங்கினார். திருச்செந்தூர் முருகப் பெருமான் ஆலயக் குருக்களுக்கு அசரீரியாக 'தம்பர் என்னும் எனது பக்தன் இலங்கைத் திருநாட்டிலிருந்து வருகை தந்து இவ்வாலயத்திலே நோன்பிருக்கிறான் அவன் திருக்கரத்தினில் வெள்ளிவேல் ஒன்று கொடுக்கும் படி கேட்கப்பட்டது.' அவ்வாறே ஆலயக்குருக்களும் முருகப் பெருமானின் அசரீரிக்கு அமைய தம்பரிடம் அரியதொரு

வெள்ளிவேல் ஒன்றினை கொடுத்தருளினார். அவ்வேலினைப் பெற்ற தம்பர் மிக அதிசயித்து நோன்பினை நிறைவேற்றி இலங்கை திரும்பும் எண்ணத்துடன் தன் பயணத்தை ஆரம்பித்தார். வரும் வழியிலே தம்பர் மிக பக்குவமாக அவ் அரிய வேலினை தன் கரத்தில் பற்றி வந்து கொண்டிருக்கையில் காதில் குண்டலமும் மார்பில் உருத்திராக்கமும் தோளிலே காவி உத்தரியமும் தரித்த ஒருவர் தம்பரின் முன்னே தரிசனம் கொடுத்தார். தன் திருவாய் மலர 'உன்னிடம் உள்ள வெள்ளிவேலினை என்னிடம் தந்தால் இந்த தங்க வேலினை உன்னிடம் தருவேன்' எனக் கேட்க, 'திருச்செந்தூர் முருகப் பெருமானின் அருளால் கிடைத்த இவ் வெள்ளிவேல் இப்பூமியில் ஈடாகாது' என்று கூறி ஒருபோதும் இவ்வரியதொரு வேலினை ஈயேன் இவ்வேலினை வட்டூர் வெப்பட்டியொல்லையில் வைத்து வழிபட சங்கற்பம் செய்து கொண்டுள்ளேன் என்று கூறி மறுத்தார். அவர் முன்னே வந்த வித்தகர் திடீரென மறைந்து விட்டார். தம்முன்னே தரிசனம் தந்தவர் முருகப் பெருமான் தான் என்று உணர்ந்த நிலையில் அதனை நினைந்து நினைந்து உருகி தொழுத வண்ணம் வட்டூர் வெப்பட்டியொல்லையை வந்தடைந்து இன்றும் நாம் காணும் தெய்வீகப் பொலிவுடன் விளங்கும் இவ்விடத்திலே ஸ்தாபித்துக் கொண்டார். அதுவே செந்தில் முருகையா ஆலய தோற்றுவாய் பற்றிய கதை ஆகும். இவர் காலத்தைத் தொடர்ந்து இவ்வாலயம் காலத்திற்கு காலம் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று கும்பாபிஷேங்கள் செய்யப்பட்டன. அவை பற்றிய காலங்கள் மிகத் தெளிவு இல்லாதவிடத்தும் 08.06.1959ம் ஆண்டு அமரர் ச.பொன்னுச்சாமியும் அவர்களது சகோதரர்களாலும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

பின்னரும் தொடர்ந்து நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள் எல்லாம் நடைபெற்றன. இவ்வாறன முறையில் கால மாற்றங்களாலும் பல்வேறு அசாதாரண சூழ்நிலைகளாலும் கட்டடங்களில் ஏற்பட்ட சிதைவுகளாலும்

ஆலய அமைப்பானது முற்றாக மாற்றியமைக்கப்பட்டு 09.07.2014ம் ஆண்டு புனருத்தாரண அஸ்டபந்தன ஷட்கோண குண்டபட்ஷ மகா யாகத்தோடு கூடிய நூதன, துவிதள இராஜகோபுர பிரதிஸ்டா மகாகும்பாபிஷேகம் செய்வதற்கு திருவருள் கைகூடியது. புனித கங்கை நீரினால் மிகச்சிறந்த முறையில் கும்பாபிஷேகம் இனிதே நிறைவு பெற்றது. அந்த வகையில் இப்பொழுதும் புதுப் பொலிவுடனும் தெய்வீக அருளுடனும் திகழ்கிறது.

## 3. ஆலய அமைப்புமுறை

வெப்பட்டியொல்லையில் கிழக்கு நோக்கிய வண்ணம் அமையப் பெற்றுள்ள இவ்வாலயமானது கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸநபன மண்டபம், ஸதம்ப மண்டபம், வசந்த மண்டபம், துவிதள இராஜகோபுரம் என்பன ஆகமம் கூறும் ஆலய அமைப்பு முறைக்கு ஏற்ப அமையப் பெற்றுள்ளது. கருவறையானது மூன்று தள விமானத்தைக் கொண்டு அமையப் பெற்றுள்ளது. கருவறையின் ஏழாம் பதத்தில் திருச்செந்தூர் சிவசுப்ரமணிய சுவாமிகளும், சிவசுப்ரமணிய சுவாமிகள் பூசை செய்யும் விதமாக பத்தாம் பதத்தில் சிவலிங்கமும் அமைக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபத்தில் தெற்குநோக்கி அமையபெற்ற கருவறையில் உலோகத்தால் அமைக்கப்பெற்ற வள்ளி தெய்வயானை சமேத சண்முகப்பெருமானின் வடிவமும் விநாயகர் பாலமுருகன் என்பன அமையப்பெற்றுள்ளன. ஸ்நபனமண்டபத்தின் தெற்கு நோக்கிய கருவறையில் வள்ளி தெய்வயானை சமேத முத்துக்குமார சுவாமியினது உலோக விக்கிரகம் அமையப்பெற்றுள்ளது. அத்தோடு கருவறை வாயிலின் தெற்குப் புறத்தில் விநாயகர் அசல விக்கிரகமாக அமைக்கப்பெற்றுள்ளது. வடபுறத்தில் சந்தான கோபாலர் அசல விக்கிரகமாக அமையப்பெற்றுள்ளது. ஸ்தம்ப மண்டபத்தில் மூலாதாரகணபதி, ஸ்தம்பம், பலிபீடம், மயூரம் என்பன அமையப்பெற்றுள்ளன. கருவறையின் தெற்குப்புற மாடச்சுவரில் நர்த்தன விநாயகரும்

தட்சணாமூர்த்தமும் மேற்குப்புற மாடச்சுவரில் பழனியாண்டவரும் , வடக்குப்புற மாடச்சுவரில் பிரம்மாவும் துர்க்கையும் அமையப்பெற்றுள்ளது.

ஸ்தம்ப மண்டபத்தின் வடக்குப்புறமாக நவக்கிரகக் கோயிலும் வசந்த மண்டபத்தின் மேற்கருகில் சிவகாமி அம்பாள் சமேத நடராஜ பெருமானும் மணிவாசகப் பெருமானும் அமையப்பெற்றுள்ளது. கிழக்குத்திசையில் மேற்கு நோக்கியவாறு யாகசாலையும் வைரவர் பரிவாரக் கோயிலும் காண்டா மணிக்கோபுரமும் அதனை அடுத்து ஆலய நுழைவாயில் இராஜகோபுரமும் அமைந்துள்ளது. இராஜகோபுரத்தின் தெற்குப்புற வெளிச்சுவரில் அருணகிரி நாதரதும் பாம்பன் சுவாமிகளதும் முழுச்சிற்பமும் , வடக்குப்பற வெளிச்சுவரில் முருகப்பெருமான் ஔவையாருக்குச் சுட்டபழம் கொடுத்த கதை முழுச்சிற்பமாக அமையப்பெற்றுள்ளது. உள்சுற்றின் தென்கிழக்குத்திசையில் யாகசாலையும் தெற்கு நுழைவாயிலும் இரண்டு பெருவீதிகளும் அமையப் பெற்றுள்ளமை கண்கூடு.

## 4. ஆலயக்கிரியைகள்

இவ்வாலயத்தில் நித்தியக்கிரியையாக காலை மாலை என்ற இரண்டு வேளைப் பூசை சிறப்பாக நடைபெறுகிறது. திருக்கணித பஞ்சாங்க முறைப்படி நைமித்திய கிரியையாக சித்திரைப்புத்தாண்டு, வைகாசிவிசாகம், கந்தசஷ்டி , திருக்கார்த்திகை, மார்கழிவிநாயகசஷ்டி , திருவெம்பாவை , தைப்பூசம் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. மாதந்தோறும் கார்த்திகை உற்சவமானது ஸ்நபன அபிஷேகத்துடன் மாலை வேளையில் சிறப்பான பூசையும் எம்பெருமான் உள்வீதி வலம் வருதலும் வழமை. வருடத்திற்கு ஒருதடவை நடைபெறும் மகோற்சவம் ஆடி மாதக்கார்த்திகை நட்சத்திரத்தை தீர்த்தநாளாகக் கொண்டு பதினொரு தினங்கள் நடைபெறுகின்றமை வழமையாகும். முதல் நாள்

கொடியேற்றமும், இரண்டாம் நாள் மாலைவேளை கற்பூரத்திருவிழா முருகப்பெருமான் கைலாசவாகனத்தில் எழுந்தருளி காட்சி கொடுக்கவும் மூன்றாம் நாள் மாலை வேளை மாம்பழத்திருவிழாவும் நான்காம் நாள் மாலை வேளை வேதாகமத்திருவிழாவும் ஐந்தாம் நாள் மாலை வேளை திருமுறைத்திருவிழாவும் ஆறாம் நாள் கந்தரலங்காரத்திருவிழாவும் ஏழாம் நாள் திருப்புகழ் திருவிழாவும் எட்டாம் நாள் வேட்டைத்திருவிழாவும் ஸ்ரீமத்பாம்பன் சுவாமிகளின் திருப்பாத் திருவிழாவும் ஒன்பதாம் நாள் சப்பறத்திருவிழாவும் வள்ளளார் திருப்பாத் திருவிழாவும் பத்தாம் நாள் காலை விசேட வசந்தமண்டப பூசையும் சண்முகஅர்ச்சனையும் சண்முகப் பெருமான் தேருக்கு எழுந்தருளி திருத்தேர் பவனி விநாயகர் திருத்தேருமாக அமைந்து காணப்படும். மாலை தேரடி உற்சவம் நடைபெறும் பதினொராம் நாள் காலையில் தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறும். மறுநாள் பூங்காவனத்திருவிழாவும் திருக்கல்யாண உற்சவமும் சிறப்பாக நடைபெறும் அத்தோடு ஆனிமாத மணவாளக்கோலத்திருவிழா என்றும் கந்தசஷ்டி நாள் என்றும் சத்துரு சங்கார ஓமமும் சங்காபிஷேகமும் மிகவும் சிறப்பாகவும் கிரியா பூர்வமாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்க விடயம் ஆகும்.

மேலும் இவ்வாலயத்தில் கந்தசஷ்டி காலத்தில் கந்தபுராணபடன மரபும் விநாயகசஷ்டி காலத்தில் பிள்ளையார் கதையும் மார்கழிமாத முதல் வெள்ளிக்கிழமையில் திருவாசக, திருக்கோவையார் முற்றோதலும் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஈழத்துத் திருச்செந்தூர் முருகையாவின் அருள் யவார்க்கும் கிடைப்பதாக!

# மதிப்பீட்டுரை

“கந்தரது பூதி பெற்றுக் கந்தரது பூதி சொன்ன எந்தையருள் நாடியிருக்கு நாள் எந்த நாளோ? எம் பெருமான் முருகப்பெருமானது திருவருளால் வட்டுக்கோட்டை மேற்கு வெப்பட்டியொல்லை அருண்மிகு செந்தில் முருகையா சுவாமி நான்மணிமாலை எனும் முதற்பதிப்பானது 2025.07.19 அன்று செந்தில் முருகையா சுவாமி ஆலயத்தின் வெளியீடுவது சிறந்ததொரு அருட்பணியாகும்.

இன்றைய தலைமுறையினருக்கு தமிழ் இலக்கண இலக்கியம் இரும்புக்கடலை என்பதை விட எட்டிக்காய் எனலாம். போதிய நூல் அறிவின்றி பிறநூல்களை பார்த்து மாற்றி எழுதும் பழக்கத்தினால் நூல்களில் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. இதனால் தமிழ் இலக்கண இலக்கியங்கள் தடம்புரண்டு விடுகின்றன. இந்நிலையில் தற்காலத்தில் பண்டிதர் மயில்வாகனனார் போன்ற பெரும் புலவர்கள் பெரும் வழிகாட்டிகளாக உள்ளனர்.

சொல்லுக்கும் வாக்கிற்கும் அருணகிரி “திருப்புகழ் விருப்பமொடு செப்பென எனக்கருள்கை மறவேனே ...” எனும் அருணகிரியின் பாடலுக்கு ஏற்ப எம்பெருமானை அறியுமறிவு கொண்டு அருள்நிலையில் நான்மணிமாலை என்னும் நூலை யார்த்துள்ளார். திரு. புலவர்மணி கதிரேசன் மயில்வாகனனார் முருகன் நாமம் எண்திசையும் ஒலித்தோங்க செய்ததோடு நின்றுவிடாது பண்டித பரம்பரையை வளர்த்தெடுக்கும் பணியாக இந்நூல் அமைகின்றது என்பது ஐயம் இல்லை.

நாம் ஒன்று நினைத்து எழுதக் கையொன்று எழுதும் என்பதற்கு இணங்க புலவர் அவர்களின் புலமைத்துவச் சிறப்பினை அவரது பாடல்கள் ஒவ்வொன்றிலும் காணமுடிகின்றது.

“நெஞ்சே நினைக்கொன்று செப்புவன் நித்தலும் நீ நினைதி
அஞ்சே லெனநின்று மஞ்ஞையில் ஆடும் அருட்குமரன்..”
என்றும் கட்டளைக் கலித்துறையும் , “ ஓங்கா ரம்மே உனதருள் உருவம்....” என்ற ஆசிரியப்பா நிலைமண்டிலத் தொடர்பாடல்களும்

“என் செயலெனவே எதொன்றுமின்றி
நின்செயலெனவே நேரடிக் கண்டு....”

என்னும் அடிகள் தாயுமானர் பாடலை நினைவூட்டுகின்றன. பயன் பெறு நூலை அள்ளி வழங்கிய பண்டிதர் ஐயா அவர்களை நினைவு கூர்ந்து அவரது நூலை வெளியீடுவதில் பெருமை அடைகின்றோம்.

ஆலயத்தின் நித்திய குருவால் ஆசியுரை வழங்கியமை நூலுக்கு மேன்மையைத்தருகின்றது. ஆசியும் வாழ்த்தும் மேன்மையானது. இந்தவகையில் இந்நூலின் வாழ்த்துரை சிறப்பிடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. ஞாலம் மறந்த மென்மைத் தெய்வத்தமிழ்களால் ஊரையும் ஊர்மக்களையும் நூலாசிரியரையும் வெளிப்படுத்துகின்ற பாணி தனிச்சிறப்பு.

“மேலைப்புலத்திலிருந்து வந்த மிஷனரிமார்கள் வட்டுக்கோட்டையிலே உலகத்தரமிக்க உயர்கல்விப்பீடத்தினை அமைத்தனர் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டமையை எடுத்துக் காட்டியமை நூலுக்கு மேன் மேலும் சிறந்த மேன்மைமிகு வாழ்த்துரையாக அமைகின்றது. நூலுக்கு வாழ்த்துரை கூறும் போது பாடல்கள் பலவற்றை தொட்டுக்காட்டியும் யாப்பின் சிறப்பினை எடுத்து விளக்கியமை அவரது எழுத்தாற்றலையும் திறமையையும் எடுத்து கூறிய திறன் பேராசிரியருக்கே உரிய பாணியாக அமைகின்றது. பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசு ஐயா அவர்களை பாராட்டாமல் இருந்துவிட முடியாது.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

எனும் திருமூலர் வாக்கிற்கு இணங்க குருவினை நினைந்து அவற்றை இறைவனுக்கு காணிக்கையாகச் சமர்ப்பிக்கும் விழுமியத்தை பண்டிதமணி கையாண்டுள்ளமையை ஆழ்ந்து அகன்று நுண்ணிப்புடன் இலக்கிய முதுமுனைவர் அ.சண்முகதாஸ் வாழ்நாள் தமிழ்ப் பேராசிரியர் ஐயா அவர்கள் எடுத்துக்கூறியமை விபுலானந்த அடிகள் தன்குரு சுவாமி சிவானந்தரை நன்றிமறவாது மட்டக்களப்பு கல்லடியில் நிறுவிய பாடசாலைக்கு சிவானந்த வித்தியாலயம் எனத் நாமம் சூட்டியமையை நினைவு கூறுவதாக அமைகின்றது. பேராசிரியரின் வாழ்த்துச் செய்தி என்பதில் மட்டற்ற மன மகிழ்வு அடைகின்றோம்.

சைவப்புலவர் சண்முகவடிவு தில்லைமணி அம்மா அவர்களின் வாழ்த்துரை இரத்தினச் சுருக்கமாகச் சிறந்த முறையில் அமைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. நூலின் உட்பொருள்களையும் ஆசானையும் அலங்கரித்து அணி செய்வது அணிந்துரை. ஆசான் பற்றிய தகவல்களையும் நூலையும் தொட்டுக்காட்டி நூலுக்கு அணிந்துரை வடித்தமை சிறப்பாக அமைகின்றது.

"இளையோய் ! அழகா ! குமாரா! குகனே.." எனும் அடியும் நூலைப்படிப்போர் உள்ளத்தை உருக்கும் என்பதில் ஐயமில்லை.

" எந்நன்றி கொன்றார்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு " என்ற வாக்கிற்கு இணங்க எனதுரை அமைந்திருக்கின்றது. ஆலய வரலாறு மிகப்பழமை வாய்ந்த ஆலயமாகவும் திருச்செந்தூர் வேலவனின் அருளால் உருவாகியதாகவும் காணப்படுகின்றது. திருக்கணிதப்பஞ்சாங்க முறைப்படி ஆலயக் கிரியை இடம்பெருகின்றது.

மேலதிக இணைப்பாக செந்தில் முருகையா அருட்பாமாலை அமைகின்றது. இந்நூலில் பொருட் சுவை நன்றாகவே அமைந்து காணப்படுகின்றது. அவசரமான உலகில் பொறுமையாகக் கேட்போரும் படிப்போரும் அருகி விட்ட காலத்தில் அருட்பாமாலை நீண்டு விட்டது என்று எண்ணத் தோன்றுகின்றது. மோனை எதுகை அழகு நடையாக பாடல்கள் அமைந்துள்ளமை அருட்பாவிற்கு மெருகு ஊட்டி அமைந்து காணப்படுகின்றது.

"ஆறுகொள் சடையான் அப்பன் விழியில்
ஆறுமுகன் அவதாரம் கண்டோம்..."

"தண்டை அணிந்து தளரம் மின்ன
திருச்செந்தூர் முருகன் வந்தான் தேவர்கள் தேவன் வந்தான்"

"அண்டர்தம் முதல்வன் அகத்துறை வேந்தன்....."

பாடல் அடிகள் வெவ்வேறு இன முறையில் அமைத்து காணப்படினும் சொற் செறிவும் பொருள் நிறைவும் காணப்படுகின்றது. நூல் ஆக்கியோன் பெயர் பாடல் அடிப்பகுதியில் வருவதே சிறப்பாகும். மேலும் அருளாளர்களின் பாடல்கள் மேலுதிகமாக இடம்பெறுவதால் படிப்போருக்கு நற்பயன் நல்கும். மேலும் திருப்பள்ளியெழுச்சி , அற்புதம் நிறைந்த தெய்வம் , வந்தனை செய்திடுவோம் என்னும் பாடல்களும் நூலை அலங்கரித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை அருள் இல்லார்க்கு அவ்வுலகில்லை "எத்தனை பாடல்களையும் எழுதி விடலாம் அதனை உரிய முறையில் அச்சுப்பதிப்பித்து நூலை வெளியீடுவதற்கு பொருளை வழங்குவது என்பது எல்லாராலும் இயலாத காரியம். நூலை வெளியீடுவதற்கு அமரர் நாகமணி அருளானந்தம் , அமரர் அருளானந்தம் திலகவதியம்மா ஆகிய இருவரும் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க முருகப்பெருமான் திருவருள் கொண்டு நூல்

வெளியீட்டுக்கான பணத்தை அருளிய மகேஸ்வரன் கானுஜனுக்கும் அச்சுவானம் ஏற்றுவதற்கு முன்னின்று உழைத்த மயில்வாகனம் மகேஸ்வரன் மற்றும் மகேஸ்வரன் செல்வரஞ்சினி ஆகியோருக்கும் எம்பெருமான் முருகப்பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டுவதோடு இவ்நூலை வெளியீடு செய்யத்துணை நின்ற அனைவருக்கும் கிருபா சமுத்திராகிய முருகவேள் துணை நிற்கட்டும்.

வேலும் மயிலும் துணை



**திருமுருக துரந்தரி.திருமதி குஞ்சரா விஸ்ணுராசா,**
**ஆசிரியை, பண்டிதை, சித்தாந்தரத்தினம்,**
**திருமந்திரச்செல்வர், திருமுறைநெறிச் செல்வர்,**
**அறநெறிச் செல்வி, சிறப்புச் சொற்பொழிவாளர்,**
**சைவசித்தாந்த முதுகலைமாணி(MA),**
**பேராதனைப் பல்கலைக்கழகம் வெளிவாரி(BA)**
**சைவத்தமிழ் கலைமகள் கல்விநிலைய நிறுவுனர்(1988).**
**2025.07.05**

## வட்டுக்கோட்டை மேற்கு
## வெப்பட்டியொல்லை
## அருண்மிகு செந்தில் முருகையா சுவாமி

# *நான்மணிமாலை*

### காப்பு

சீரார் வளவயல் வட்டூர் முருகையன்
ஏரார் திருவடிக்கே இன்றமிழால் - பேராரும்
நான்மணி மாலை நவின்றேத்த ஐங்கரன்றன்
காண்மலர் உண்டே தலை.

### நூல்
### வெண்பா

மலரோனும் மாலும் மகவானும் ஏத்தும்
நலனார் சுடர்வைவேல் நம்பீ - பலர்போற்றும்
வட்டூரில் வெப்பட்டி வள்ளல் அருட்கண்பார்
மட்டூர் கடம்பா மதித்து

### கட்டளைக் கலித்துறை

கடம்பனைக் கந்தனைக் கார்முகில் வண்ணன் மகிழ்குகனை
உடம்பிடி ஏந்தும் ஒருவனை உம்பர்தங் காவலனை
மடம்பயில் குஞ்சரி வள்ளியர்கோனை வயங்கு வட்டூர்
தடம்பயில் வெப்பட்டி வேலனைத் தஞ்சமென் றேத்து நெஞ்சே

## ஆசிரியவிருத்தம்
## எண்சீர்கழி நெடில்

தஞ்சமென்றுள்ள அடித்தொண்டர் ஓல மிட்டால்
சண்முகரே மயிலேற போந்து நிற்பீர்
நஞ்சமுதம் கொண்டபரன் சுதனாய் வந்தீர்
நக்கீரன் றனக்குமருள் நாடிச் செய்தீர்
கொஞ்சுமிசைத் தண்டையது கலகலக்கக்
குகபரனே ஓடோடி வாருமையா
விஞ்சுபுகழ் வெப்பட்டி ஓல்லை வாழ்வே
விரிசுடரே அருண்மலையே விமல மூர்த்தி

## ஆசிரியப்பா

விமலன் ஈசன் விடைமிசை வருவான்
கமலமார் பாதம் கௌரி பங்கினன்
அலைகடல் நஞ்சை அள்ளி யயின்றோன்
கலைவடி வானோன் கயிலை வாசனின்
ஒண்ணுதற் றழலின் உதித்தனை அருளி

தண்ணெனுஞ் சரவணத் தடத்தில் வளர்ந்து
ஆரன் மகளிர் அணைத்தனர் இரீஇப்
பேரன் புடனாய்ப் பெருகுதீம் பால்தரத்
தெவிட்டி யுண்டு திளைத்தருள் முருகா!
வியனுறு கயிலை வெற்பின் ஒருசார்

நயனுறு மாடல் நடத்தினை நாளெலாம்
ஆறெனும் படைவீ டாங்கண் தம்முள்
வேறுவே றாடல் வேலோய் புரிந்தனை
தெள்ளுதிரை கொழிக்குஞ் செந்தூர் அதனில்
வள்ளலாய் வைகி வளம்பல நல்கினை

கள்ளங் கபடம் கரவறியாதோர்
உள்ளந் தூயர் உனைவேண்டிடவே
ஏர்வளங் கெழுமிய இரும்பதி என்னாப்
பாரொல்லாம் போற்றும் பழமைசால் வட்டூர்
வெப்பட்டி ஒல்லை வியன்பதி யாங்கண்

துப்பன இதழ்வாய்த் தோகையர் உடனாய்
வந்தமர்ந் தனையென வகுப்பர் முந்தையோர்
தோகை மயிலில் தோன்றுங் குகனே
வாகையம் புயனே வடிவே லழகா
கார்த்தி கேயா கங்கா சுதனே

சண்முக சிவனே சாமி நாதா
சேவலங் கொடியோய் செல்வக் குமரா
கற்றுணர் புலவோர் கலை பல வல்லோர்
செற்றங் களைந்த செம்புலச் செல்வர்
அருண்மொழி பயிலும் அருஞ்செவி தன்னில்

புல்லியம் புகலும் பொருளில் வாசகம்
பாலுண் பார்க்குப் பழம்புளிங் காடியால்
நஞ்சை அமுதுசெய் நம்பன் சேய்நீ
எஞ்செயல் இகழ்கிலை எந்தையே முருகா
எற்றினி அடிமைக் கின்னருள் புரியே

**வெண்பா**

இன்னருள் ஈசனவன் எம்மான் சருவேசன்
தன்னருட் சேய்முருகன் தங்குமிடம் - மன்னுபொழில்
வண்ணமயில் நின்றாடும் வட்டூரின் வெப்பட்டி
என்னவுணர் நெஞ்சே இனி

**கட்டளைக் கலித்துறை**

நெஞ்சே நினைக்கொன்று செப்புவன் நித்தலும் நீ நினைதி
அஞ்சே லெனநின்று மஞ்ஞையில் ஆடும் அருட்குமரன்
பஞ்சே ரடியினர் வென்னுவெப் பட்டி பயில்முருகன்
செஞ்சே வடியே செழும்பொருள் காணிச் செகத்தினிதே

## ஆசிரிய விருத்தம்
## அறுசீர்க்கழிநெடிலடி

செகமீதில் முன்பொருகால் திருமுருகன்
தேவரெல்லாம் தெளியும் வண்ணம்
அகமீதில் ஓராடல் எண்ணினனாய்
அண்டசரா சரங்கள் மற்றும்
மகவானும் மலரவனும் தன்னிடத்தே
வந்துதிப்பக் காட்டி இந்நாள்
முகமீதில் நகைதவழ வதிந்துவட்டூர்
வாழவருள் பொழிவன் நன்கே.

## ஆசிரியப்பா
## நிலைமண்டிலம்

பொழிதரு கருணை பொருந்துகொண் மூவாய்ப்
புவனம் அனைத்தையும் புரந்தருள் பரனே
பவநனி கடந்த படிமையோர் தாமும்
ஆதியும் அந்தமும் அற்றிடு நின்னை
ஓதியால் உணர்ந்தே உரைத்தனர் வாழி

ஓங்கா ரம்மே உனதருள் உருவம்
வீங்குமெய்ஞ் ஞான வடிவேல் தாங்கி
விந்துவாம் மயில்மிசை விரும்பி யமர்ந்து
முந்துசீர் நாதமாய் மொழிதர நின்ற
கோதில் சேவலங் கொடிதனைத் தழீஇ

இச்சா சத்தியாய் இயம்பு வள்ளியைக்
கிரியா சத்தியாய்க் கிளர்தரு சேனையை
வலவயின் இடவயின் மரபொடும் இருத்தி
ஆறுதத் துவங்களும் ஆறுமா முகமென
கூறப் போந்தே குலவுதி எந்தாய்!

ஊழி பேரினும் உலவாச் சிறப்பின்
கயிலை ஒருசார் கவினுற விளங்கும்
கந்த கிரிக்கண் காதல் கூர்தர
முந்துபொற் றவிசில் முனிவோர் ஏத்திட
அமர்ந்தருள் ஓலக்கம் அடியோர் தொழுதெழக்

காவுங் கழனியும் கடல்வளம் உழவும்
பாவும் கூத்தும் பற்பல சிறப்பும்
மேவும் வட்டூர் வியன்பதி யாங்கண்
வெப்பட்டி யொல்லை விளங்குமந் திரத்தில்

வந்தமர்ந் தருளி வற்றா வரு ணலம்
தந்தே புரக்கும் சால்போ பெரிதால்
என்னதன் காரணம் அடியேம் அறியேம்
எந்தையோர் செய்தவம் ஏற்றமிக் குடைத்தே

## வெண்பா

ஏற்ற முறலாம் இருந்தவங் கைகூடும்
சாற்றுங் கலைவிதங்கள் தாம்பெறலாம் - போற்றவரு
வட்டூரில் வெப்பட்டி வாழ்முருகன் பங்கயத்தாள்
இட்டமுடன் வாழ்த்த இனிது

## கட்டளைக் கலித்துறை

இனியனை ஏழையர் உள்ளத் தவிசில் இருப்பவனைக்
கனியனை முன்னாள் உமையவள் தந்தருள் காவலனைத்
தணியனை வெப்பட்டி ஒல்லையில் தங்குந் தயாநிதியைக்
குனிசிலை ஏந்தி குமர உனைப்பாடக் குறையிலையே

## ஆசிரிய விருத்தம்
## எண்சீர்க்கழிநெடிலடி

குறையேதும் இலையென்றுன் அடியரெல்லாம்
குதூகலிப்பர் குமரேசா உமையாள்பாலா
மறையினருள் வடிவெனவே வேதமெல்லாம்
மாமயிலோய் முருகோனே புகழ்ந்து பாடும்
இறைசிறிதும் தாழ்க்கலையாய் எம்முன்வந்தே
ஈசாவெம் வேலழகா ஆசிநல்கும்
நறைமலியும் சோலைபயில் வட்டூர்வாழ்வே
நங்கைவள்ளி குஞ்சரியார் நயக்கும்தேவே

## ஆசிரியப்பா

### நேரிசை ஆசிரியப்பா

நயந்தரு நாயக நாடரும் முதலே
கயத்துரி போர்த்திய கண்ணுதற் கடவுள்
தந்தருள் சுதனே சண்முக சிவனே
பேறுபெற் றுலகெலாம் பெட்புடன் வாழ
ஆறுமா முகங்கொள் ஐயனே குகனே

உருத்திர கணத்தோர் ஒருபதி னோர்கள்
கருத்துடன் வெல்படைக் கலன்களாக
திருத்தகு கரங்களில் சேர்ந்தினி திருப்ப
விடுத்திடின் விரிந்தே விளங்குபல் அண்டமும்
அடுத்து முடிக்கும் ஆற்றல் சான்ற

சோதி நெடுவேற் சுந்தர வடிவே
ஆதி அந்தம் அறிவரும் இறையே
அணிமயில் மீதினில் அமர்ந்தெவ் வுலகையும்
கணிப்பருங் கதியில் கடந்துநீ வருகுவை
வேண்டிய வேண்டிய வேண்டுநர் தமக்கு

தண்டா தவர்குறை தானும் நீக்குவை
ஒண்டேன் பிலிற்றும் உயர்பொழில் மேய
வட்டு ராங்கண் வருவெப் பட்டி
இட்டமாய் உறையும் இளையோய் முருகா

குடிகுடி அடியேம் குற்றமே உடையேம்

மிடியுள தீர்த்து மேலும் மேலும்
அடியிணை மறவா அமைதியும் தந்து
அன்பும் அருளும் நல்குதி முருகா
ஏத்துதும் ஏத்துதும் எந்தையே பரனே

**வெண்பா**

பரம்பரன் பாவகி பன்னிரு தோளும்
வரந்தகு தாளிணையும் வேலும் - இருந்தொளிர்
புன்னகையும் வட்டூர் புகுந்து வழுத்தியபின்
என்னேதான் வேண்டும் இயம்பு

**கட்டளைக் கலித்துறை**

**செவிலி வருந்துதல்**

என்னே இனியுய்யும் ஏந்திழை என்னா இரங்குவன் யான்
முன்னே குறமென் கொடிக்கருள் செய்திட்ட மூர்த்தியவன்
தன்னார் அகலத்துச் சூடிய தொங்கல் தராதகன்றான்
இன்னார் நிலவுங் கடலொலி யோடிங் கெழுந்திடுமே

**ஆசிரிய விருத்தம்**

**அறுசீர் கழிநெடிலடி**

எழுந்த சுடரின் பேரொளியோய் இதயக் கோயில் அமர் குருவே
அழுந்தும் அமரர் துயர்துடைக்க அவுணன் பேரூர் புகுந்தோனே
விழுந்தசூரன் தனக்கருளி மேவும் சேவல் மயில் செய்தாய்
கழுந்தார் வடிவேல் வட்டூரா கந்தா குமரா காத்தருளே

## ஆசிரியப்பா

குமரவேள் அழகன் குறிஞ்சிக் கிழவன்
அமரர் தொழூஉம் அற்புத மூர்த்தி
கங்கையாள் மைந்தன் கடம்பன் குகபரன்
மங்கை உமையார் மகிழ்தரு மதலை
சரவணன் சண்முகன் சாமி செட்டி

எண்ணுவார் இதயத் தெய்திடும் இயவுள்
கல்லகம் குடைந்த கந்தவேள் எம்மான்
குஞ்சரி வள்ளியர் குலவு புயத்தோன்
அஞ்சலிர் என்றே அபயம் அளிப்போன்
பேரா யிரமுடைப் பெம்மான் முருகன்

ஆக்கியும் காத்தும் அழித்தும் மறைத்தும்
அருளியும் அனைத்தும் ஆண்டருள் அண்ணல்
கருத்தினில் அகலாக் கருணையங் கடவுள்
திருத்தகும் அருணலம் திளைத்திட வேண்டி
பழுமரம் தேரும் பறவை என்ன

ஆறுபடை வீடும் அகன்பதி பிறவும்
பெறுமுறை புகூஉம் பெற்றியீர் கேண்மோ
மாவொடு வருக்கையும் வாழையும் வாய்ந்து
காவொடு கழனியும் கவினிக் கலித்துயர்
வட்டூர் ராங்கண் வருவெப் பட்டி

ஒல்லையம் பதிதனில் உறைதரும் ஒருவனை
நல்லிதின் நாடி நம்பெரு மானே!
இந்நில மீமிசை வாழ்நர் ஏவரும்
நின்னருள் நீர்மை நிகழ்தல் அரிதால்
என்னா இயம்பி இதயநெக் குருகி

உடல்கம் பித்தே உரோமஞ் சிலிர்த்தே
கரகமலங் களைச் சிரமிசை இருத்தி
விழிநீர் பெருக்கி வேண்டி நிற்பின்
குமரவடி வேலன் குறிப்பறிந் தாங்கே
உருத்துவரு வெவ்வினை ஒருங்கே அகற்றி

திருத்தகு கல்வியும் செம்பொனும் போகமும்
வீரமும் மற்றும் விழைந்தன அனைத்தும்
அள்ளி அள்ளி அருளுவன் முருகையன்
மாண்டரு நல்லீர் மலரடி தொழுமே.

**வெண்பா**

தொழுதார் அருணகிரி தூவடிகள் போற்றி
விழுமம் துடைத்தனைநீ வேலோய் - வழுவேன்
குருவாகி வந்து குறைதீரும் வட்டூர்ப்
பெருமானே சேயோய் பெயர்ந்து

## கட்டளைக் கலித்துறை

சேயானைச் செந்தில் அமந்தருள் செவ்வேளைத் தேசிகனைத்
தாயானைக் குன்றெங்கும் ஆடிடும் தற்பர சண்முகனை
வாயானை வள்ளலை வட்டூரில் வந்து பழவடியான்
ஓயாதே உள்க உவக்கும் ஒருவனை ஓதுமினே

## ஆசிரியவிருத்தம்
## அறுசீர்க்கழிநெடிலடி

மின்னியொளிர் வேற்படையோன் வேண்டினர்கள்
வேண்டுவரம் நல்கும் தெய்வம்
கன்னியர்கள் எந்தாயர் இருவரொடும்
கலாபமயில் ஊருங் கந்தன்
துன்னியெழும் அசுரவிருள் தொலைத்துதவும்
செங்கதிரோன் சோதி வேலோன்
பன்னியசீர் வட்டூர் பங்கயத்தாள்
பவக்கடற்கோர் புனையே கண்டீர்

## ஆசிரியப்பா

பவக்கடல் கடக்கப் பற்றிடும் புனையே
தவத்திறம் பூண்டோர் இதயச் சுடரே
தேடரும் பொருளே சிவசண் முகனே
ஆடக மலைநின் அருளுரு ஏய்க்கும்
மரகதப் பொருப்பு வள்ளிநாயகி காண்

வயிரவான் குன்றம் வானவர் குமரி
தேவகுஞ் சரியார் திறமது மானும்
இம்மலை மூன்றும் இணைந்தவா போல்நினை
எம்மையாள் கோவே எளியேம் காண்டும்
ஆறுதிரு முகமும் அறைதரு காலை

அன்பை அருளை அறத்தைப் பண்பை
இன்பினைத் தொண்டை இசைத்து நிற்கும்
திருவடித் தாமரை சிவஞானமாகி
அருவினைப் பந்தம் அகற்றி யருளும்
துங்கம் மலியுஞ் சுடர்நெடு வேலோய்

தெங்கம் பழங்கள் சிதறிச் சிந்தி
ஆங்குள பூகம் அனைத்தினும் படீஇ
பைங்காய் வீழ்த்தப் புன்றலைச் சிறார்கள்
ஆங்கவை எடுத்தனர் அயின்று குதட்டித்
தாயார் சிறுகோல் தாங்கி ஓச்ச

போயொரு சாரில் புகுந்தே மறைவர்
மாலைவந் திறுத்தும் மனையின் முன்றலில்
பளிங்கைத் தகடு பண்ணிப் பணித்தவா
விளங்கும் முன்றில் மேவிப் புகுந்து
இன்மொழிப் பாட்டியர் ஓக்கலில் அமர்ந்து

கன்னலாம் இனிக்கும் கதைகேட் டுறங்குவார்
இன்ன பெற்றி இயைந்தவட் டூரில்
உற்றவெப் பட்டி உயர்சின கரத்தில்
அத்த அமல ஆதி நாயக
சுத்த ஞான சோதி சொரூப

பொற்றவி சதனில் பொலிவுடன் இருந்தீர்
எந்தம் அடிகேள் எளியேம் பொருட்டால்
நித்தலும் நும்புகழ் பாடி யேத்துகேம்
காத்தே அருள்புரி காவலோயே

**வெண்பா**

காவலனை வானோர்தங் கற்பகத்தைச் செவ்வேளைத்
காவலரும் நீபமணி காளைதனை - மாவடிவாய்
மாக்கடலுள் நின்றானை வந்தடிமை கொண்டானைப்
பூக்கொண்டு போற்றிப் புகழ்

## கட்டளைக் கலித்துறை

### பாங்கற் கூட்டம் உயிரென வியத்தல்

புகழும் பொருளாகி உள்ளம் புகுந்து புணர்ந்து நின்று
திகழும் வகைவினில் தெள்ளமிர் தாகிவட் டூரிருந்தே
இகழும் பரிசினி லீங்கெனை ஏங்கித் தவிக்கவைத்தும்
மகிழும் இயல்பினில் வந்துற் றதாலென்றன் மன்னுயிரே

## ஆசிரிய விருத்தம்

### எண்சீர்கழிநெடிலடி

மன்னுயிரின் உள்ளொளியாய் வளரும் தெய்வம்
மயிலேறி விளையாடி மகிழும் தெய்வம்
துன்னுமலைக் குவடுதொறும் திரியும் தெய்வம்
தோகைவள்ளி தெய்வயானை மகிழும் தெய்வம்
என்னினிய தாயாகித் தந்தையாகி
ஏற்றமுறு குருவாகி இருக்கும் தெய்வம்
வன்னவயல் வெப்பட்டி வாழும் தெய்வம்
வடிவேலோன் திருவடியை வழுத்துவோமே

## ஆசிரியப்பா

திருவடி வழுத்துந் திறலினர் தமக்கு
வருவினை வேகம் மாற்றி மற்றும்
அறம்பொருள் இன்பம் வீடவை அனைத்தும்
பெறுமுறை அருளும் பெருமான் முருகன்
பாற்கடல் கடைவுழிப் படந்தெழு நஞ்சை

ஏற்றனி தயின்ற எண்டோள் முக்கண்
நீறணி நிமலன் நேயப் புதல்வன்
நாரத முனிவோன் நடத்திடு மகமதில்
ஆரஞர் இயற்றி அடுத்த தடத்தை
அடக்கி இவர்ந்தருள் ஆறுமா முகவன்

அயனைச் சிறைசெய் தாங்கவன் வெருவுற
சிவனார் வேண்டச் சிறைவீடு செய்தோன்
அருந்தமிழ்க் குரவன் அகத்திய முனிக்குத்
திருந்துப தேசம் செய்தருள் தேசிகன்
ஆறெழுத்தாகிய அருளுருக் கொண்டோன்.

வீறுகே தனமே வச்சிரம் அங்குசம்
மாறிலா விசிகம் மாண்புறு வைவேல்
ஆய வலத்தும் அபயம் மற்றும்
தூய இடத்தே தோற்றிடு வரதமும்
மருவுபங் கயமுடன் மணிமழுத் தண்டுவில்

ஆதிய அமைதரு பன்னிரு கரத்தோன்
உறுநர் தமக்கிங் குற்றன அனைத்தும்
பெறுமுறை ஈந்தருள் பொருந்துவட டூரில்
காமரு வெப்பட்டிக் கவின்பதி யாங்கண்

இந்நாள் இருந்தனன் இன்னருள் வழங்க
என்னவர்க் குற்ற எழுத்தா றோதி
கந்தா குமரா கார்த்தி கேயா
சுந்தர சிவனே சுடர்வடி வேலா
ஏலவார் குழலியர் இருவர் கோவே

கோலமா மஞ்ஞையில் குலவுமெங் குருவே
என்றெலாம் பரவி இணையடி தொழுமின்
பெறுதற் கரிய பேறுகள் அனைத்தும்
நசையுடன் ஈகுவன் நயந்தினி திருமே

**வெண்பா**

இருந்தனமே வேலோய்நீ எய்துமலம் மூன்றின்
அருந்திறலை மாய்க்கும் அமைதி - புரிந்திடவோ
முந்திவரு மேடமும் வாரணமும் மஞ்ஞையும்
எந்தையே ஊர்ந்தாய் இயம்பு

**கட்டளைக் கலித்துறை**

இயங்கொட்டி ஆடுங் குரவையின் இச்சையால் ஏந்திழையாழ்
புயம்பற்றி ஆடுவை என்பர் புலவர் பொறிமயிலோய்
நயம்மிக்கு அன்னையர் ஆங்கது கேட்டவர் நாணுவர்காண்
வயம்மிக்க வட்டூரில் வெப்பட்டி ஒல்லையில் வாழ்குகனே

## ஆசிரியவிருத்தம்

### அறுசீர்க்கழிநெடில்

குகனே பரனே கோமளமே குஞ்சரி வள்ளி மகிழ்கோவே
முகமே ஆறு படைத்துடையாய் முக்கணர்க் கோதும் குருமணியே
தகவே மலிவும் வெப்பட்டித் தளியில் உறையும் வேலவனே
அகமே மன்னி அமர்ந்தனைநீ அடியர் உறுதுயர் தீர்த்தருளே

### ஆசிரியப்பா

அருளே அன்பே அழகே வாழி
மருளும் அடியர் மனவிருள் அகற்ற
மூவிரு முகனும் முந்நான் காகும்
தாவில் கரமும் தண்ணொளி விரிக்கும்
பன்னருஞ் சிறப்பிற் பதிணெண் விழிகளும்

அன்றலர்ந் திட்ட அரவிந்த பதமும்
கொண்டருள் கோலம் வாழ்க வாழ்க
இருபுடை தனினும் இருந்தெமைப் பேண
வருகுறக் கொடியும் வானவர் மின்னும்
சேவலும் மயிலும் திருக்கை வேலும்

மேவிரு காட்சி வாழ்க வாழ்க
திருபரங் குன்றத் துறையுஞ் செல்வா!
திருச்செந் தூர்வாழ் தேவ தேவா
ஆவிநன் குடியுறை ஆறுமா முகனே
திருவே ரகத்துறை திருமான் மருகா

குன்றாச் சிறப்பிற் குன்றுதோ றாடி
பழமுதிர் சோலை மலைமகிழ் வோனே
மாயிரு ஞாலத்து மன்னுயிர் முதலே
ஆயிரம் ஆயிரம் திருப்பதி தோறும்
தங்கி யிருந்தருள் சாமி நாதா

ஒன்னலர் முப்புரம் ஒருங்குடன் செற்றே
பின்னவர்க் கருளிய பெருமான் புதல்வா!
வளமலி வட்டூர் வருவெப் பட்டியில்
உளமகிழ் வுடனாய் உற்றிடுந் தனைநீ
கருவுற்ற  நாண்முதற் கழலடி காண்பான்

உருகிற் றெனுள்ளம் உலைந்துலைந் தலுத்தேன்
தெரிவரும் பொருளே தேசிக மணியே
உன்பற் றன்றி ஒருபற் றில்லேன்
உன்பழ வடியன் உரைகே ளாயோ
அருவினை தீர்த்தெனை ஆண்டருள் கோவே

**வெண்பா**

கோவே குமரா குணங்கணீ குற்றமுநீ
தேவே பிரானீயே சிந்திப்பன் - மேவியசீர்
தோன்றாத் துணையுநீ சுற்றநீ முற்றுநீ
ஆன்றோர் மொழிகாண் அது

## கட்டளைக் கலித்துறை

காணும் புதுமலர் மாலையும் சூட்டிடின் வாடிடுமால்
பூணும் பசும்பொன் இழைதானும் புல்லிது நாற்றமின்றே
கோணும் எனையுஞ் சொன் மாலை தொடுத்தடி சாத்தவைத்தாய்
பேணும் தகையதன்றே எம்பிரான் செய்த பேரருளே

## ஆசிரியவீருத்தம்

## பன்னிருசீர்க்கழிநெடில்

அருவாய் உருவாய் அருவுருவாய் அடியார் காணும் குகபரனே
அணியார் மயிலின் மிசையேறி ஆடும் அழகா முருகோனே
மருவார் புதுவீச் சூடிமகிழ் மலையான் மகளார் மகிழ்குழகா
மதலாய அன்புப் பழநீயால் வருந்தல் வேண்டா வெனவணைக்கத்
திருவார் பழநித் திருப்பதியில் திகழும் குன்றிற் குடிகொண்டாய்
திருமால் போற்றும் மருகோனே செல்வ வருக தேன்பிலிற்றும்
தருவார் வட்டூர் வெப்பட்டித் தலைவா வருக தமிழ்க்குருவே
தருணம் இதுகாண் சண்முகனே தாயர் உடனாய் வந்தருளே

## ஆசிரியப்பா

அருட்பெருங் கடலே அமிர்தே அகமாம்
பொருட்பயன் விரிக்கும் புலவோன் நீயே
வனக்குற மின்கொடி வள்ளி ஓம்பும்
தினைப்புனம் சென்று தீந்தமிழ்த் துறைகள்
அனைத்தையும் பேணி ஆடல் புரிந்தே

அவனி  வாழ்வுற அருங்கடி இயற்றி
வாழும் வழியினை வாழ்ந்து காட்டி
மட்டில் சீர்த்தி வட்டூர் போந்து
வெப்பட்டி ஒல்லை வீற்றீருந் தனையால்
பழயெதும் இல்லேம் பழங்குடி வந்தேம்

வழிவழி நின்றனன் பழவடி யேம்மாம்
விடுவிக்கும் விண்ணப்பம் நவலோய் கேட்டி
அன்பும் அருளும் அறனும் உடையோர்
பண்பும் பணிவும் பக்தியும் பூண்டோர்
ஈகையும் நயனும் இனிதெனக் கொண்டோர்

வாய்மையும் நாணும் வாய்ந்திடு சீரோர்
தன்னலம் பேணார் பிறர்நலம் பேணுநர்
அழுக்கா றவாவே இன்னா வெகுளியாம்
தீக்குணந் துறந்த செம்மையாளர்
குறிப்பறிந் தொழுகும் குணமது படைத்தோர்

மக்கட் பணியே மகேசன் பணியென
எக்கா லத்தும் இயற்றுந் திறத்தோர்
ஓயா துழைக்கும் ஊக்கம் கொண்டோர்
கொல்லா விரதம் வல்லாங்கு பேணுநர்
என்றே இவரும் இவர்போல வாரும்

நன்றும் இந்த நாட்டினில் வாழ்க
கொடுஞ்சூர் தடிந்த நெடுந்தனி வேலோய்
சாந்தம் ஒற்றுமை தழைத்தே ஓங்குக
இ∴தென் உள்ளம் இ∴தென் எண்ணம்
காசினி முற்றும் களிப்புடன் வாழ
வருணீ மாமயி லோயே !

**வெண்பா**

மாமயில் வீரனை மன்றாடி மைந்தனைக்
காமரு வட்டூர்க் கடம்பனை - ஏமுறுசீர்
பூங்கொடியார் வள்ளிமயில் போற்றுஞ் சிவசுதனை
ஈங்கேத்த இல்லை இடர்

**கட்டளைக் கலித்துறை**

ஈங்கண் வினைசுடச் செய்வகை இன்றி இரங்குகிற்பீர்
யாங்கும் மலர்செறி வட்டூரில் வெப்பட்டி வாழ்முருகன்
ஒங்கும் பிணிவகை நீக்கி உந்தன் துயர் துடைப்பான்
ஏங்கும் எமக்கருள் என்றே அனுதினம் ஏத்துமினே

**ஆசிரியவிருத்தம்**
**பன்னிருசீர்கழிநெடில்**

மின்னும் உருவே விகிர்தாநீ விளங்கும் குடிலைப் பொருளன்றோ
மேவுங் கலைகள் சாத்திரங்கள் விரிக்கும் பொருளும் நீயலையோ
பன்னுங் கதிரைப் பதிதனிலும் பாங்கர் மாவை நல்லையிலும்
பாடுந் தொண்டை மானாற்றும் பக்தர் நின்னைக் காண்கிறார்

பின்னும் வட்டூர்வெப்பட்டி பேணி யாடல் புரிகின்றாய்
அன்னாள் அடியார் நின்புகழை அன்பாய்ப் பாடி மகிழ்கின்றாய்
இன்னும் முருகா வாரலையே ஏழையடியேங் கண்களிப்ப
ஏழிலார் சதங்கை கலகலப்ப என்றோ வருவாய் இளையோனே

### ஆசிரியப்பா

இளையோய் அழகா குமரா குகனே
வளைக்கை மலைமகள் மகிழும் மதலாய்
ஆலந் தன்னை அமுதுசெய் துண்டோன்
மாலும் அயனும் காண்கிலா மகிபன்
விடைமிசை ஏறும் விமலன் மகனே !

குழந்தையாய் நின்னைக் குழகா கண்டு
காலம் முழுவதும் களித்திடல் வேண்டும்
பொன்னார் திருப்பதஞ் சிலம்பொடு கிண்கிணி
மின்னி மிளிர்ந்து மிகவொலி எடுப்ப
திருவரை தனிலே அரைஞாண் திகழ்தர

அம்பொன் அசும்பும் பண்டியு மாட
முந்துபேர் எழிலின் முன்கை அசைப்ப
தோள்களில் வாகு வலயந் துலங்க
கேழ்கிளர் மார்பில் மாலைகள் கிடப்ப
கந்தரம் தானும் கவினது சேர்க்க

ஒண்டா மரையென உரைக்கும் விழிகள்
மண்டு நிலவின் தண்ணொளி விரிக்க
நீண்ணுதல் தன்னில் திலகம் திகழ
விண்டிடற் கரிய வியன்செவி நிரையில்
குண்டலம் முதல கூடிக் குலவ

பானலம் வாயின் கடையின் பாங்கர்
தேனினும் இனிய உமிழ்நீர் சிந்தக்
குறுநகை யதிலே இளவெயில் உதிர
முத்துமுத் தாகக் குறுவேல் கொட்ட
வள்ளற் குமரா துள்ளுநடை போட்டு

எந்தன் முன்னே எழுந்தோடி வாவா
இட்ட முடனாய் ஏவரும் வாழும்
வட்டூர் வெப்பட்டி வாழ்தகு செல்வா!
கொட்டும் அருளில் குளித்தல் வேண்டும்
இந்த வரந்தந் தெனையாள் குகனே

**வெண்பா**

தந்தாய் குமரநின் தாமரைத்தாள் நந்தமக்கும்
வந்தித்தே நாளும் வளம் பெறவே - அந்தமிலாய்
துப்பட்டி அன்னவிதழ்த் தோகையர்வாழ் வெப்பட்டி
அப்பாகை மாறென் றறை

## கட்டளைக் கலித்துறை

### குறைநயப்புக்கூறல்

அப்பாகை வென்றுற்ற அஞ்சொல்லி கண்டிடின் ஆற்றலையால்
இப்பாலை வெப்பட்டி வேவனை ஏய்ந்தோன் புனத்தயலே
ஒப்பாய மந்திக் கிளநீர் கடுவனும் ஊட்டநைந்தே
தப்பாது பேயறைந் தோனாய்நின் றான்தடந் தோளவனே

### ஆசிரியவிருத்தம்

தோளா மணியே சுடர்முத்தே தொழுபர் உள்ளத் தவிசினிலே
துயிலும் தெய்வத் திருமதலாய் சுத்தஞான வடிவோனே
கேளாய் நின்றாய் வானோர்க்கும் கிரவுஞ் சத்தோ ட்சுர்கீண்டாய்
கிராதர் மாதுஞ் சுரர்மாதும் கேடில் தவத்தால் நினையடைந்தாய்
நாளும் பாதம் பணிவார்க்கு ஞானங் கல்வி செல்வமெல்லாம்
நன்கே யருளி நவையான நண்ணா வகைநீ காத்தருள்வாய்
ஆளா நின்றோம் அஞ்சிறைவண் டாலும் சோலை வட்டூரா
அரசே வாழ் வெப்பட்டி அமருங் குகனே முருகோனே

### ஆசிரியப்பா

முருகா குமரா முத்தமிழ் விரகா
திருவார் அழகா செந்தமிழ்க்குரவா
முழுமதி அன்ன மூவிரு முகமொடுஞ்
செழுமலர்த் தாளுடைச் சிவமே போற்றி
பன்னிரு தோளுடைய பதியே போற்றி

தீதற வணங்கிச் சிறுமுனி வேண்டிட
ஓதுமெய் இறைவநூல் உரைத்தனை போற்றி
எந்தையை முறைமையால் ஏத்தி இறைஞ்சி
வந்துறு படைபெறும் வள்ளலே போற்றி
வாகெனும் அண்ணல் வலவயின் நிற்ப

எண்மர் இயக்கர் பூதரும் ஈண்டச்
சேனா பதியாஞ் திருநிலை போற்றி
வள்ளிகுஞ் சரியார் மகிழ்வுடன் மேவ
புள்ளி மயிலூர் கோலம் போற்றி
ஊழி முதல்வா போற்றி போற்றி

வாழி வாழி வடிவே லரசே
கள்ளமில் குணத்தேங் கற்பன கற்றிலேம்
ஏழை அடியேம் இயம்புவ கேண்மோ
நின்றன் நீள்புகழ் நித்தலும் கேட்பேன்
எந்தன் நாவால் எடுத்துப் பாடுவேன்

ஒண்டேன் பிலிற்றும் மலருள ஆய்ந்து
கொண்டே அருச்சனை குறைவறச் செய்வேன்
வந்தடி வீழ்ந்து வந்தனை புரிவேன்
இன்னவா புரிந்து அமையே னாகி
எசமானன் என்னா என்றும் ஏத்துவன்

நசையது துரப்ப நாளும் நாளும்
தாசனாகித் தனித் தொன் டியற்றுவன்
அனுபவ முதிர்வின் அறுமுகா யானும்
தோழ னாகித் துரிசெலாம் அகன்றே
என்றனை நின்றனக் கொப்புவித் திடுவேன்

ஆத்ம நிவேதனம் இயற்றி அதனால்
என்செய லெனவே ஏதொன்று மின்றி
நின்செய லெனவே நேரடிக் கண்டு
வைய மீமிசை வாழ்ந்திட வேண்டும்
வீழ்புனல் பெய்யர தொழிந்தக் கண்ணும்
ஆழ்புனல் வற்றா அமைதிசால் கூவலும்
காவுங் கழனியும் மேவிய வட்டூர்
வெப்பட்டி ஒல்லைத் தேவ தேவே!
வற்றா இன்னருள் வழங்கி அருளிணி
போற்றுவம் போற்றுவம் பொற்றாண் டலரே

**சுபம்**




ANIKARTICK-2014